DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| Name | முருகேசன் | Village | கிருஷ்ணாபுரம் |
|---|---|---|---|
| Father's Name | மணிராஜன் | Taluk | வாணியம்பாடி |
| Age | 45 | Calling | தனியார் வேலை |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **23.07.2026**

**O.S. No.135/2021** **வா.சா.1** **12.55 PM – 01.38 PM**

**குறுக்கு விசாரணை–**

1. இந்த வழக்கின் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் எனக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.98/2024 என ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் இந்த ஆவணம் தான் எனக்கு எதிராக மேற்படி தாக்கல் செய்யப்பட்டு இருக்கும் வழக்கின் வழக்குரை என்று சொன்னால் சரிதான். **(மேற்படி ஆவணத்தின் வழக்கின் வழக்குரை பி.வா.சா.ஆ.1–ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. இந்த வழக்கில் பிரதிவாதிகள் என்ன பதில் உரை தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு சொத்தானது ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் என்னுடைய தகப்பனார் மணிராஜன் என்பவருக்கு பாத்தியப்பட்டதாகும். நான் படவட்டா (எ) தமிழரசியை திருமணம் செய்து அதன் பயனாக இந்த வழக்கின் 1 , 2 பிரதிவாதிகள் மற்றும் ருத்தீஷ் என்ற பிள்ளைகள் பிறந்தனர் என்றால் சரிதான்.

3. என்னுடைய மனைவி தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். என்னுடைய மனைவி இறந்த பிறகு நானும் என்னுடைய குடும்பத்தாரும் சேர்ந்து 1, 2 பிரதிவாதிகள் மற்றும் ருத்தீஷ்க்கும் 31.07.2009–ல் வழக்கு சொத்து குறித்து பத்திரம் செய்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் மைனர்களுக்கு கார்டியனாக இந்த வழக்கின் 3ம் பிரதிவாதி தசரதன் என்பவரை நியமித்து பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

4. மேற்படி தசரதன் என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் என்னுடைய சின்ன மாமனாரும் மற்றும் என்னுடைய அக்காவின் கணவரும்

ஆவார். எனக்கும் மேற்படி தசரதனுக்கு எவ்வித பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். அப்படி இருக்கும் போது மேற்படி தசரதனை எதற்காக இந்த வழக்கில் 3–வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டார் என்று சொன்னால் அவரை கார்டியனாக நியமித்து பத்திர பதிவு செய்துள்ளதால் சேர்த்துள்ளேன்.

5. அப்படி என்றால் ரூத்தீஷ் என்பவரை இந்த வழக்கில் சேர்க்காததற்கு என்ன காரணம் என்றால் சாட்சி அதற்கு ருத்தீஷ் என்னுடைய சிறுவயதில் இருந்து வளர்ந்து வருகிறார் என்று கூறுகிறார். 31.05.2010–ம் தேதியில் சொத்தானது என்னுடைய பெயரில் வழக்கு சொத்து கிரயம் ஆகிவிட்டது என்று கூறியிருக்கிறேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.2–ன் மூலம் தான் மேற்படி நான் கூறியது போன்று என் பெயருக்கு தசரதன் என்பவர் மைனர்களுக்கு கார்டியனாக இருந்து விற்பனை செய்துள்ளார் என்றால் ஆமாம்.

6. மைனர்களுக்கு கார்டியனாக இருந்து விற்பனை செய்வதற்கு முன்பு நீதிமன்றத்தில் ஏதேனும் அனுமதி பெறப்பட்டாதா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.2–ல் நீதிமன்றத்தில் அனுமதி பெறப்பட்டது போன்று ஏதேனும் குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் மைனர்களுக்கு சொந்தமானது என்றும் தன்னுடைய பராமரிப்பிலும் உள்ள சொத்தை விற்பனை செய்வதாக தான் குறிப்பு உள்ளது என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.1 –ஐ சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு கேள்வி கேட்கப்படுகிறது. மைனர்கள் மேஜரான உடன் அவர்களுக்கு ஒப்படைக்க வேண்டும் என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், நான் முறையாக பணம் கொடுத்துதான் தசரதனிடம் இருந்து வாங்கினேன். வா.சா.ஆ.1–ல் விற்பனையாளர் என்ற இடத்தில் 3வதாக வரும் நபராக நான் தான் என்றால் சரிதான், ஆனால் அதில் 3–வது விற்பனையாளர் என்ற இடத்தில் இருக்கும் கையொப்பமானது என்னுடையது அல்ல, நான் கையொப்பம் செய்யவில்லை.

8. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 5வது சாட்சி கையொப்பம் செய்திருக்கும் ஜெயராமன் தான் என்னுடைய மாமனாரும் இந்த வழக்கில் 4–வது பிரதிவாதி என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் இன்னார் என்று நிறுபித்தவர் என்ற இடத்தில் உள்ள கணேசன் மற்றும் குப்புசாமி ஆகியோருக்கும் எனக்கும் எந்தவித விரோதம் இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3வது விற்பனையாளர் என்று உள்ள புகைப்படம் என்னுடையது தான் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தை

அடிப்படையாக வைத்து தான் என் பெயருக்கு நான் பத்திரம் செய்துகொண்டேன் என்றால் ஆமாம்.

9. வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள 1வது பக்கத்தின் பின்புறம் உள்ள 1, 3வது புகைப்படம் யாருடையது என்றால் என்னுடையது தான். வா.சா.ஆ.1 ஆவணமான மைனர்களுக்காக தசரதன் பெயரில் எழுதி வைத்த ஆவணம் தான் என நான் ஒப்புக்கொள்கிறேனா என்றால் ஆமாம். அந்த ஆவணத்தின் விற்பனையாளர்களில் ஒருவராகவும் உள்ள புகைப்படத்தில் 3வது நபராகவும் நான் இல்லை என தற்போது வரை மறுப்பு தெரிவிக்காததற்கு என்ன காரணம் என்றால் என் தந்தை தான் தசரதனை கார்டியனாக நியமித்து எழுதி வைத்தார் எனக்கு எதுவும் தெரியாது.

10. இவ்வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையை மறுத்து என்னுடைய முதல் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மனைவி இறந்து 10–வது நாளில் வா.சா.ஆ.1 ஆவணம் பதிவாகியது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய மனைவி இறந்த தேதி கூறமுடியுமா என்றால் எனக்கு தேதி நினைவில்லை 2009 ம் வருடம் இறந்துவிட்டார்.

11. மனைவி இறந்த பிறகு இந்த வழக்கின் 1,2 பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதி ஜெயராமன் பராமரிப்பில் தான் இருந்தார்கள் என்றால் சரியல்ல. 1, 2ம் பிரதிவாதிகள் தற்போது எங்கு இருக்கிறார்கள் என்றால் 4ம் பிரதிவாதியின் பராமரிப்பில் உள்ளார்கள். 1,2 பிரதிவாதிகள் என்ன படித்துள்ளார்கள் என்றால் நந்தினி டிப்ளமோ படித்துள்ளார், கொடிலா என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியவில்லை.

12. 1,2 பிரதிவாதிகள் தற்போது எங்கு வேலை செய்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மைனர்கள் மேஜராகியவுடன் ஒப்படைக்க வேண்டும் என்று வா.சா.ஆ.1ல் உள்ளது அதற்கு விரோதமாக செயல்பட்டு பதிவுசெய்யப்பட்ட வா.சா.ஆ.2 ஆவணம் செல்லத்தக்கததல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் பின்னிட்டு ஜெயந்தி என்பவரை திருமணம் செய்து அதன் பயனாக கிருபாகரன் என்ற மகன் உள்ளார் என்று சொன்னால் சரிதான்.

13. தாவா சொத்திற்கான பட்டா மைனர்களாக இருந்த 1, 2 பிரதிவாதிகள் மற்றும் ருத்திஷ் ஆகியோர் பெயர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டது என்று

சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தில் இருந்து வந்த வருமானத்தில் தான் 1, 2 பிரதிவாதிகள் படித்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் வளர்ச்சி பணிகளும் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், நான் தான் பயிர் செய்து வருகிறேன்.

14.நான் தவறான வகையில் வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் வழக்கு சொத்தை அடைந்தது குறித்து இந்த வழக்கில் அழைப்பாணை சார்வு செய்த பிறகு தான் 1, 2 பிரதிவாதிகளுக்கு தெரியவந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தை உள்ளடக்கி 13.07.2021–ம் தேதியில் குடும்பத்தார் அனைவரும் சேர்ந்து ஒரு பாகப்பிரிவினை பத்திரம் பதிவு செய்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் வா.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி கூறிதான் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் இல்லை.

15.2021 வருடத்திய பாகப்பிரிவினை பத்திரத்தில் இந்த வழக்கின் 1,2 பிரதிவாதிகள் தரப்பினரா என்றால் இல்லை. பாகப்பிரிவினை பத்திரத்திற்கு பிறகு 16.07.2021–ம் தேதியில் எங்கள் குடும்பத்தினர்களுக்கிடையே தாவா சொத்தை உள்ளடக்கி வேறொரு பத்திரமும் பதிவு செய்யப்பட்டது என்றால் இல்லை. மேற்படி 16.07.2021ம் தேதியிட்ட பத்திரத்தில் என்னுடைய மனைவி ஜெயந்தி ஒரு தரப்பினராக இருந்தார் என்று சொன்னால் இல்லை.

16.தற்போது மேற்படி ஜெயந்தி என்பவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தை அடிப்படையாக வைத்து அர்ஜூனன், சகுந்தலா, முருகேசன், பாரதி மற்றும் அஸ்வினி ஆகியோர் பெயரிகளில் தனிதனியாக பத்திரம் பதிவு செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். மேற்படி பத்திரங்கள் பதிவாகிய போது ஜெயந்தி பெயரிலும் ஒரு பத்திரம் பதிவாகியது என்று சொன்னால் இல்லை. ஜெயந்தி இறந்த பிறகு நானும் என்னுடைய மகன் கிருபாகரன் மட்டும் தான் வாரிசு என்றால் ஆமாம்.

17.இந்த தாவா சொத்தை உள்ளடக்கி பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரமும் அதன் அடிப்படையில் பிறகு பதிவு செய்யப்பட்ட மேற்கூறிய பத்திரங்களும் செல்லாது என அ.வ.எண்.98/2024 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து தற்போதும் 1, 2 பிரதிவாதிகளில் சுவாதீனத்தில் தான் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல, என்னிடம் தான் உள்ளது. வா.சா.ஆ.1

ஆவணத்தின் பின்னிட்டு தான் தாவா சொத்தில் கிணறு வெட்டப்பட்டது என்றால் அது தவறு. தாவா சொத்தில் கிணறு உள்ளதா என்றால் உள்ளது.

18.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிணறு இருப்பதாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் 1,2 பிரதிவாதிகளின் சொந்த தகப்பனார் என்ற விவரத்தை கூட இந்த வழக்குரையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இவ்வழக்கில் 3, 4 பிரதிவாதிகள் இருவரும் சொந்த அண்ணன் தம்பி என்றால் சரிதான். 3–ம் பிரதிவாதி தசரதன் என்பவரின் மனைவி என்னுடைய சகோதரி பெயர் என்னவென்றால் சின்னப்பாப்பா ஆகும், அவர் என்னுடைய முதல் மனைவி இறந்த பிறகு இறந்துவிட்டார்.

19. 2021ல் வழக்கு தாக்கல் செய்யும் சமயம் ருத்தீஷக்கு என்ன வயது இருக்கும் என்றால் அப்போது மைனராக தான் இருந்தார். மைனர்களுக்காக ஆவண ரீதியான கார்டியனான தசரதன் சரிவர சொத்தை பாதுக்காக்காததால் தான் மைனர்களின் தாயாரின் பாட்டனாரான ஜெயராமன் தான் சொத்தை பராமரித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. ஜெயராமனை இந்த வழக்கில் எதற்காக தரப்பினராக சேர்த்தேன் என்றால் சொத்தை விற்பனை செய்ய முற்பட்டபோது தசரதனிடம் பிரச்சனைக்கு ஜெயராமன் சென்றதால்தான்.

***குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.